பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 ஆடி 28 திங்கட்கிழமை (12-08-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 177

# தமிழகம் நோக்கி தொடர்ந்து இலங்கைத் தமிழ் அகதிகள்

## முல்லைத்தீவில் கடற்படை தாக்குதல்

கொழும்பு, ஓக. 12

கடந்த வெள்ளிக்கிழமை இரவு 10 மணியளவில் முல்லைத்தீவை அடுத்துள்ள கடற்பகுதியில் கடற்புலிகளின் படகு ஒன்றின் மீது கடற்படையினர் தாக்குதல் நடத்தியதாக அறிவிக்கப்படுகின்றது.

(உ-3-5)

## இராமேஸ்வரத்திற்கு நேற்றும் 52 பேர்

சென்னை, ஓகஸ்ட் 12

**இலங்கைத் தமிழ் அகதிகள் தமிழகம் நோக்கிச் செல்வது தொடர்கின்றது.**

**நேற்றும் 52 பேர் இராமேஸ்வரத்துக்கு வந்து சேர்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.**

பேசாலையைச் சேர்ந்த ஏழு பெண்கள் உட்பட 15 பேர் நேற்றுக் காலை இராமேஸ்வரம் வந்து சேர்ந்தனர் என இந்திய வானொலி அறிவித்தது.

போர் காரணமாக அங்கு கடந்த இரு மாதங்களாக உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதாகவும் —

தாங்கள் ஒவ்வொருவரும் தலா ஆயிரம் ரூபா பணம் செலுத்தி தனுஷ்கோடி வந்து சேர்ந்ததாகவும் —

அவர்கள் தெரிவித்ததாக மாநிலச் செய்தியில் அறிவிக்கப்பட்டது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னிக்கு உணவுப் பொருள்கள் இன்று 40 லொறிகளில் செல்லும்

வவுனியா, ஓக. 12

கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களுக்கும், வவுனியா வடக்கு பிரதேசத்துக்கும் 40 லொறிகளில் உணவுப்பொருள்கள் இன்று அனுப்பிவைக்கப்படும்.

வன்னிப் பெருநிலப்பரப்பில் இருந்து கடந்த நான்காம் திகதி சாந்தசோலைக்கு வந்திருந்த 40 லொறிகளிலும் இன்று உணவுப் பொருள்கள் எடுத்துச் செல்லப்படும் என்று வவுனியா அரச அதிபர் கே. கணேஷ் தெரிவித்தார்.

கடந்த மூன்று வாரங்களுக்கு மேலாக வவுனியாவில் காத்து நிற்கும் 120 லொறிகளில் முதற்கட்டமாக 40 லொறிகள் உணவுப் பொருள்களைக் கொண்டு சென்று —

சாந்தசோலையில் காத்து நிற்கும் லொறிகளிடம் ஒப்படைக்கும்

வவுனியாவிலிருந்து சாந்தசோலை வரை லொறிகள் உணவுப் பொருள்களுடன் செல்வதற்கான அனுமதி சனிக்கிழமை காலையே பாதுகாப்பு அமைச்சிடமிருந்து கிடைத்ததாகவும் —

அதன் பின்னரே உணவு லொறிகளை அனுப்புவதற்கான ஏற்பாடுகளைத் தாம் ஆரம்பித்ததாகவும் — வவுனியாவில் உள்ள அரச அதிகாரி தெரிவித்தார்.

இதேவேளை —

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கும், வவுனியா வடக்குப் பிரதேசத்துக்கும் போதுமான உணவுப் பொருள்கள் வவுனியாவில் வைக்கப்பட்டிருப்பதாகவும் —

இன்று ஆரம்பமாகும் லொறிப் போக்குவரத்து சீரடைந்ததும் விரைவாக அப்பொருள்களை அனுப்பி வைக்க முடியும் என்றும் —

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பட்டலந்த வதை முகாம் விவகாரம்: பொலிஸ் உயரதிகாரிகள் சி. ஐ. டியினரால் கைது!

கொழும்பு, ஓக. 12

கடந்த ஐ.தே.க. ஆட்சிக் காலத்தில் கொழும்பு பட்டலந்த பகுதியில் சித்திரவதை முகாம் ஒன்று இயங்கியதாகக் கூறப்படும் விவகாரம் தொடர்பாக உயர்மட்ட பொலீஸ் அதிகாரிகள் குழு ஒன்றை இரகசியப் பொலீஸார் நேற்றுக் கைது செய்தனர்.

கைதான பொலீஸ் குழுவில் சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி ஒருவரும் யக்கலமுல்ல பெண் பொலீஸ் இன்ஸ்பெக்டர் பத்மினி பிரேமலதாவும் அடங்குவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த விவகாரம் தொடர்பாக -- முக்கிய சந்தேக நபராகக் கருதப்பட்டு— வேலையிலிருந்து இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் (எஸ் எஸ். பி.) டக்ளஸ் பீரிஸ் நாட்டை விட்டு தப்பியோடிவிட்டதாகக் கூறப்படுவது

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சி அகதிகள் ஒரு நேரக் கஞ்சியுடன்!

### நிலைமையை நேரில் கண்ட செஞ். அதிகாரி தகவல்

லண்டன், ஓக. 12

கிளிநொச்சிப் பகுதியில் உணவுத் தட்டுப்பாடு மிக மிக மோசமடைந்துள்ளது. இடம்பெயர்ந்த மக்கள் நாளில் ஒரு நேரக் கஞ்சியையே குடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

—இவ்வாறு தகவல் தெரிவித்திருக்கிறார் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் வவுனியா கிளைச் செயலாளர் திரு சிவநாதன் கிஷோர்.

உணவு லொறிகள் போக்குவரத்து குறித்து விடுதலைப் புலிகள் பிரமுகர்களுடன் கலந்துரையாடுவதற்காகவும்—

செஞ்சிலுவைச் சங்கப் பணிகளை கிளிநொச்சியில் சீர் செய்வது குறித்து நேரில் கண்டறிவதற்காகவும்—

அவர் சில தினங்களுக்கு முன்னரே கிளிநொச்சிக்குச் சென்று வவுனியா திரும்பினார்.

அவர் தாம் நேரில் கண்ட கிளிநொச்சி நிலைமையை பீ.பி.ஸிக்கு வழங்கிய பேட்டி ஒன்றில் தெரிவித்தார்.

அவர் விவரித்ததாவது:-

'உண்மை வெற்றி' இராணுவ நடவடிக்கை தொடங்கிய நாளில் இருந்து கிளிநொச்சி மக்கள் இடம்பெயர்ந்து கனகராயன்குளம், மாங்குளம், கோணாவில், அக்கராயன் போன்ற இடங்களில் அடிப்படை வசதிகள் இன்றி வீதியோரத்திலும், மர நிழல்களிலும், தண்ணீர் வசதி இல்லாத இடங்களிலும் தங்கியுள்ளனர்.

போதியளவு சாப்பாட்டுக்கு வழி இல்லாத நிலையில் மக்கள் தவிக்கிறார்கள். ப. நோ. கூ. சங்கங்களிலும் உணவுப் பொருள்கள் கையிருப்பில் இல்லை. ஒரு நாளைக்கு ஒரு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## நிலையைப் பலப்படுத்தும் நடவடிக்கையில் துருப்புகள்

கொழும்பு, ஓக. 12

''உண்மை வெற்றி'' இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்து ஆனையிறவிலிருந்து முன்னேறிய அரசுத் துருப்புகள் தாம் கைப்பற்றிய பகுதிகளில் தமது நிலையைப் பலப்படுத்தி வருவதாக பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் நேற்று அறிவித்தது.

கரடிப்போக்குச் சந்தி வரை படையினர் முன்னேறியிருப்பதாக அரசுத் தரப்பில் அறிவிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

குறிப்பிடத்தக்க மோதல் சம்பவங்கள் எதுவும் நேற்று இடம்பெறவில்லை என்றும் அறிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினமும்பெரும் மோதல் சம்பவங்கள் ஏதும் அப்பகுதியில் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(உ-3-5-10)

## ஜனாதிபதி தென்கொரியா பயணம்

கொழும்பு, ஓக. 12

நான்கு நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்றுப் பிற்பகல் தென்கொரியா பயணமானார்.

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், தொழில், தொழில் பயிற்சி அமைச்சர் மகிந்த ராஜபக்ஸ மற்றும் உயர் அதிகாரிகள் ஜனாதிபதியுடன் சென்றுள்ளனர்.

(உ-3-5)

## யாழ் பல்கலை. பரீட்சைகள்: ஒத்திவைக்கக் கோரிக்கை

### வவுனியா அரச அதிபர் விடுப்பார்

கொழும்பு, ஓக. 12

யாழ்ப்பாணத்துக்கான கப்பல் சேவை ஆரம்பிக்கப்படும் வரை யாழ். பல்கலைக்கழகப் பரீட்சைகளை ஒத்திவைக்கும்படி பல்கலைக்கழக நிர்வாகத்திடம் தான் கோரவிருப்பதாக வவுனியா அரச அதிபர் திரு. கே. கணேஷ் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் இருந்த பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள் வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந்துள்ளதாலும்—

பரீட்சை எழுதக் கூடிய மனோநிலையில் அவர்கள் இல்லாத காரணத்தாலும் —

பரீட்சைகளை ஒத்திவைக்குமாறு கோரவிருக்கிறேன் என்றும் அவர் தெரிவித்தார்.

(உ-3)

## குடாநாட்டில் வசிப்போர் 4 லட்சத்து 38 ஆயிரம் பேர்

கொழும்பு, ஓக 12

யாழ். குடாநாட்டில் தற்சமயம் ஒரு லட்சத்து 28 ஆயிரத்து 300 குடும்பங்களைச் சேர்ந்த 4 லட்சத்து 38 ஆயிரத்து 473 பேர் வாழ்கின்றனர்.

யாழ். அரச அதிபர் அண்மையில் மேற்கொண்ட தொகை மதிப்பீட்டுப் புள்ளிவிவரக் கணக்கெடுப்பு அறிக்கை வடமாகாண மீள் குடியேற்றப் புனர்வாழ்வு அதிகார சபைத் தலைவர் சோமபால குணதீரவிடம் கையளிக்கப்பட்டது என்றும் —

அதில் இந்த விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் —

இலங்கை வானொலி அறிவித்தது.

யாழ்ப்பாண மக்களுக்கு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மர்மக் கப்பலை தேடி வேட்டை

கடந்த வாரம் கற்பிட்டிக்கு அப்பால் கடலில் காணப்பட்ட மர்மக் கப்பல் ஒன்றை கடற்படைக் கப்பல்களும், விமானப்படை விமானங்களும் தேடிவருவதாக கொழும்புப் பத்திரிகைகள் நேற்று செய்தி வெளியிட்டன.

இதுவரை எந்தக் கப்பலும் கண்டு பிடிக்கப் படவில்லை என்று பாதுகாப்பு வட்டாரங்கள் நேற்று முன்தினம் தெரிவித்தனவாம்.

(உ-3)

## முஸ்லிம்கள் இருவர் கைது

'ஜெலிக் நைட்' வெடி மருந் வைத்துத் தம்பலகாமம்
துடன் சென்ற இரு முஸ்லிம் பொலீஸார் கைது செய்தனர்.
களை கந்தளாய்ப் பகுதியில் (உ-3)

# சாவகச்சேரி சந்தைப் பகுதி அருகே ஆடு, மாடு கொல்களத்தால் நாற்றம்

தென்மராட்சி, ஒக 12

சாவகச்சேரி நகரப் பகுதியில் ஆடுகள் வெட்டுவதற்கான கொல்களத்தில் கடந்த மூன்று மாதங்களாக மாடுகளும் வெட்டப்படுவதால் இங்குள்ள சந்தையின் தேங்காய் விற்பனைப் பகுதிக்கு செல்ல முடியாத அளவுக்கு துர்நாற்றம் வீசுகின்றது.

இக்கொல்களத்திற்கு முன்னால் வீசப்படும் — அறுவை செய்யப்பட்ட — கால் நடைகளின் கழிவுகள் உரிய முறையில் அகற்றப்படாததாலும்—

கொல்களத்திற்கு அருகில் புதைக்கப்படும் ஏனைய கழிவுகளை நாய்கள் வெளியே இழுத்துச் செல்வதாலும்—

சுகாதாரச் சீர்கேடு ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

முன்னர் மாடுகள் அறுக்கும் கொல்களம் நகருக்கு வெளிப்பகுதியில் இருந்ததாலும்—

வெட்டப்படும் போதும் விற்பனையின் பின்னரும் வரும் கழிவுகள் நகருக்கு வெளியே குடியிருப்பு அற்ற பகுதியில் நகரசபையினால் புதைக்கப்பட்டதாலும்—

சுகாதாரச் சீர்கேடு ஓரளவு தவிர்க்கப்பட்டிருந்தது.

தற்சமயம் மாடுகள் அறுவை செய்யும் கொல்களத்திற்கும், கழிவுகளை புதைக்கும் இடங்களுக்கும் செல்ல முடியாத நிலை உள்ளதால் சந்தை அருகில் உள்ள ஆடுகள் அறுவை செய்யப்படும் இடத்திலேயே மாடுகளும் அறுவை செய்யப்படுகின்றன. அத்துடன் இக்கொல்களத்திற்கு அருகில் உள்ள இடத்தில் கோழிகளும் இறைச்சிக்காக உரிக்கப்படுவதால் அதன் கழிவுகளும் இவ்விடத்திலேயே வீசப்படுகின்றன.

அறுவை செய்யப்படும் கால் நடைகளிலிருந்து வெளியேறும் எரு கொல்களத்திற்கு முன்னால் வீசப்பட்டு அவை பெரும் குவியலாக காணப்படுகின்றன. நாய்களால் இழுத்துச் செல்லப்பட்ட எலும்பு போன்ற கழிவுகளும் சந்தையைச் சுற்றி அங்குமிங்குமாக காணப்படுகின்றன.

கழிவுகளினால் உண்டாகும் துர்நாற்றத்தைக் கட்டுப்படுத்த சாவகச்சேரி நகரசபையும் சுகாதாரத் திணைக்கள அதிகாரிகளும் சில ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ள போதிலும் அதனைத் தடுக்கவே முடியவில்லை.

(உ-117)

## 16 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அன்னை மடியில்: **04-11-1926**

இறைவன் அடியில்; **28-07-1996**

## திருமதி மீனாட்சிப்பிள்ளை கைலாசம்பிள்ளை

அன்பின் உறைவிடமாகவும் பாசத்தின் திருவுருவமாகவும் எங்கள் குடும்பத்தின் குல விளக்காய் சுடர் வீசி அணையாத தீபமாகி எங்களைத் தவிக்க விட்டு எங்கு சென்றீர்கள்?

தங்கள் ஆன்மா சாந்தியடைய இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

இன்று **(12-08-96)** எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து மதியபோசனத்தில் பங்கு பற்றிச் செல்லுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.

C.S கைலாசம்பிள்ளை அன்ட் சன்ஸ்
76, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

''கைலாச பவனம்''
154, சட்டநாதர் வீதி'
திருநெல்வேலி கிழக்கு.

(42221)

## பொலீஸ் நிலையங்கள் மீது தாக்குதல்

கொழும்பு, ஓக. 12

கடந்த செவ்வாய் இரவு 10.15 மணியளவில் அம்பாறை மாவட்டம் சின்னவத்தைக்கும் கலப்பிட்டிகலவுக்கும் இடையே இருந்த இரு பொலீஸ் காவல் நிலையங்கள் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியிருக்கின்றனர்.

இத்தாக்குதலை பொலீஸார் முறியடித்ததாக பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்தது.

அதன் பின்னர் அப்பகுதியில் உள்ள வீடு ஒன்றின் மீது புலிகள் கைக்குண்டு வீசி, துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஒருவர் உயிரிழந்ததாகவும், இருவர் காயமடைந்ததாகவும் அறிவிக்கப்பட்டது.

(உ-3-5)

## அஸாருதீன் விளையாடுவார்

மணிலா, ஓக. 12

இலங்கை மற்றும் கனடாவில் நடைபெறவிருக்கும் கிரிக்கட் போட்டிகளுக்கு செல்லும் இந்திய அணியில் கப்டன் பதவியைப் பறிகொடுத்த முகமது அஸாருதீனும் இடம்பெறுவர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வினோத் காம்ப்ளி மீண்டும் அணிக்கு அழைக்கப்பட்டுள்ளார். கர்நாடக மிக வேகப் பந்து வீச்சாளர் டேவிட் ஜான்னும் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அணிக்கு சச்சின் டெண்டுல்கர் கப்டனாக இருப்பார் என்பது தெரிந்ததே. (உ-3)

## ஜீப் கடத்தல்

கொழும்பு, ஓக. 12

மட்டக்களப்பு மாவட்டம் சித்தாண்டியில் இலங்கை மின்சார சபைக்குக்குச் சொந்தமான ஜீப் ஒன்றைக் கடந்த வெள்ளிக்கிழமை நண்பகல் விடுதலைப் புலிகள் கடத்திச் சென்றதாகப் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது.

(உ-5)

# மரண அறிவித்தல்கள்

## இராமர் வேலாயுதம்

தெல்லிப்பழை சந்தை வீதியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது நவாலி வடக்கில் வசித்தவருமாகிய இராமர் வேலாயுதம் (காங்கேசன் சிமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர்) 09-08-1996 வெள்ளிக்கிழமையன்று காலமானார்.

அன்னார் பவளத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற மோகன்ராஜ், ரவிக்குமார், தினேஸ்காந்த், சுரேஸ்காந்த், சுபாஜினி, நிசாந்தினி ஆகியோரின் அன்புத் தகப்பனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 10-08-1996 சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வே. பவளம்
(மனைவி)

நாச்சிமார் கோவிலடி,
நவாலி வடக்கு.

(42225)

## இராசா குலசிங்கம் (பேபி)

கலட்டி சீனியர்லேனை பிறப்பிடமாகவும், மீசாலை வடக்கு கொடிகாமத்தை வசிப்பிடமாகக் கொண்டவருமான இராசா குலசிங்கம் 11. 08 .96 அன்று அகால மரணமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கலட்டி இராசா—தையல்மூத்து தம்பதியினரின் அன்பு மகனும், கமலாம்பிகையின் அன்புக் கணவரும், விக்கினராசா, (சுவிஸ்), சுமங்கலா, விமலராசா (கொழும்பு), புஸ்பகலா (இந்துக் கல்லூரி சாவகச்சேரி)ஆகியோரின் அன்பு தகப்பனாரும், மீசாலை வடக்கு கொடிகாமம் வாரித்தம்பி சிதம்பரம் தம்பதிகளின் அன்பு மருமகனும், பொன்குமாரின் சகோதரனும், சந்திரதேவனின்(ஆசிரியர் மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்) மைத்துனரும் ஆவார்.

இவரின் இறுதிக்கிரியைகள் 12. 08. 96 இன்று காலை 10.00 மணிக்கு வேம்பிராய் இந்துமயானத்தில் நடைபெறும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

மீசாலை வடக்கு,
கொடிகாமம்.

(42218)

## திருமதி சின்னத்தம்பி பாக்கியம்

வறுத்தலைவிளான், கட்டுவனைச் சேர்ந்த திருமதி சின்னத்தம்பி பாக்கியம் கொழும்பில் 26 - 07 - 96 இல் காலமானார்.

இவர் வறுத்தலைவிளான், கட்டுவனைச் சேர்ந்த தர்மர் சின்னத்தம்பியின் அன்பு மனைவியும், துரைராசா, சிவனேசமணி (கனடா), சற்குணநாதன் (T. A. நீர்ப்பாசனத் திணைக்களம், கிளிநொச்சி), குணரத்தினம், தேவராசா, செல்வராசா(பொறியியலாளர், லண்டன்), செகராசா, தியாகராசா, சிவஞானமணி, செல்வராணி (கனடா), சிவராசா (லண்டன்), ரஜனி (பிரான்ஸ்), சாந்தினி (லண்டன்), அமுதினி (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும், புவனேஸ்வரி, இராசேந்திரம் (இளைப்பாறிய கட்டட பரிசோதகர், கனடா), இரத்தினபூபதி, இந்திராணி, மல்லிகாதேவி, கலாசிறி (லண்டன்), புஷ்பமலர், திருமதி தியாகராசா (நுவரெலியா), யோகலிங்கம் (விவசாய போதனாசிரியர்), பிரேமானந்தன் (பொறியியலாளர், கனடா), விநாயகமூர்த்தி (பிரான்ஸ்), தனலக்சுமி (லண்டன்), குணரத்தினம் (லண்டன்), சூரியகுமாரன் (T. O, கொழும்பு) ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 30 - 07 - 96 இல் கனத்தை பொது மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இத்தகவலை உற்றார், உறவினர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
நாதன் கூல் பார்

கண்டி வீதி, சாவகச்சேரி.

(சி/2749)

## கேள்வி அறிவித்தல்.

வடக்கு — கிழக்கு மாகாணசபை

### நிர்மாணத் திணைக்களம்

ஆதார வைத்தியசாலை பருத்தித்துறையில் நீர் வழங்கல் வடிகாலமைப்புக்களை விருத்தி செய்தல் வேலைக்கான கேள்விகள் யாழ்ப்பாணம், கடற்கரை வீதியில் அமைந்துள்ள நிர்மாணத் திணைக்களப் பிரதம பொறியியலாளரினால் **1996** ஆம் ஆண்டு ஆவணி மாதம் **29** ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் **11 00** மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

| வேலையின் விவரம் | மீளளிக்கப்படாத வைப்புப் பணம் | மீளளிக்கப்படும் வைப்புப் பணம் |
|---|---|---|
| ஆதார வைத்தியசாலை பருத்தித்துறையில் நீர் வழங்கல் வடிகால் அமைப்புக்களை விருத்தி செய்தல். | **250/-** | **800/-** |

நிர்மாணப் பயிலுனர் அபிவிருத்தி நிறுவனத்தில் (ICTAD) 6 ஆம் தரத்திற்கு அல்லது அதற்கு மேற்பட்ட தரத்திற்கு கட்டட நிர்மாண ஒப்பந்தக்காரர்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்கள் மற்றும் பதிவு செய்யப்பட்டுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் இக் கேள்விக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையோராவர்.

கேள்விப் பத்திரங்களை **1996** ஆம் ஆண்டு ஆவணி மாதம் **23** ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் **12-00** மணி வரை நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம், நிர்மாணத் திணைக்களம், கடற்கரை வீதி, யாழ்ப்பாணத்தில் பெற்றுக் கொள்ளலாம். கேள்விக்கு சமர்ப்பிக்க வேண்டிய மேற் குறிப்பிட்ட வைப்புப் பணத்தை நிறைவேற்றுப் பொறியியலாளர், யாழ்ப்பாண அலுவலகத்தில் வைப்புச் செய்து கொள்ளலாம்.

கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்க முடியும். அத்துடன் மேலதிக விவரங்களை நிறைவேற்றுப் பொறியியலாளரிடம் இருந்து அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

★ முக்கிய குறிப்பு

கட்டடப் பொருள்கள் தட்டுப்பாட்டினைக் கருத்திற் கொண்டு மேற் குறிப்பிட்ட வேலைகளுக்குத் தேவையான கட்டடப் பொருள்கள் வைத்திருப்போர் அல்லது இவற்றைக் கொள்முதல் செய்யக் கூடியவர்கள் மட்டும் கேள்விகளைச் சமர்ப்பிக்குமாறு கேட்கப்படுகின்றனர்.

எந்திரி ந. சுந்தரமூர்த்தி,
பிரதம பொறியியலாளர்.

கடற்கரை. வீதி, நிர்மாணத் திணைக்களம்,
யாழ்ப்பாணம். யாழ்ப்பாணம்.
12 - 08 - 96

(C/2743)

### ஐடீட்டின் மரணத்தின் பின்

# சோமாலியாவில் மீண்டும் பெரும் மோதல் வெடித்தது!

மொகடிஸ், ஒக. 12

சோமாலியாவின் பிரதான கிளர்ச்சிக் குழுத் தலைவரான ஜெனரல் மொகமட் பரா ஐடீட் கொல்லப்பட்டதையடுத்து—

அங்கு நேற்று முன் தினம் மீண்டும் மோதல்கள் வெடித்ததாக அறிவிக்கப்பட்டது.

ஐடீட்டின் மரணத்துடன் உள்நாட்டு யுத்தம் சோமாலியாவில் முடிவடையலாம் என எதிர்பார்க்கப்பட்ட போதும்-

ஐடீட்டிற்குப் பதிலாக அவரது மகன் அந்த அமைப்பின் தலைமைப் பொறுப்பை ஏற்று 10 நாள்களில் மீண்டும் மோதல்கள் வெடித்துள்ளன.

தலைநகர் மொகடிஸுக்கு தெற்கு நகரில் வெடித்த மோதலில் 5 பேர் கொல்லப்பட்டனர்; பலர் காயமடைந்தனர்.

அப்பகுதியில் இடையிடையே மோதல்கள் தொடர்ந்து கொண்டிருப்பதாக பி. பி. ஸி. தெரிவித்தது.

இதே வேளை—

கடந்த வெள்ளிக்கிழமை சோமாலியாவின் எல்லையைத் தாண்டி எதியோப்பிய படைகள் புகுந்து எல்லைப் பகுதிக் கிராமங்களை கனரக ஆயுதங்களாலும் பீரங்கி பொருத்தப்பட்ட ஹெலிக்கொப்டர்களாலும் தாக்கியதாகவும்—

பின்னர் தமது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்பட்ட அந்த நகரங்களை விட்டு எதியோப்பிய படைகள் நேற்று வெளியேறின என்றும்—

பி, பி. ஸி. மேலும் தெரிவித்தது. (உ-3)

# செச்சினிய கிளர்ச்சியாளர்கள் மீது ரஷ்யப் படைகள் மூர்க்கத் தாக்குதல்!

### தலைநகர் குறொஸ்னியைப் பிடிப்பதற்கு

குறொஸ்னி, ஒக. 12

செச்சினிய பிரிவினைவாதிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் செச்சினியத் தலைநகர் குறொஸ்னியைக் கைப்பற்ற ரஷ்யப் படைகள் கடும் சண்டையில் ஈடுபட்டுள்ளதாகவும்—

கூடுதல் படைகளும், டாங்கிகளும் அங்கு அனுப்பப்படுவதாகவும்— நேற்றுக்காலை அறிவிக்கப்பட்டது.

செச்சினிய பிரிவினைவாதிகளின் திடீர்த் தாக்குதலை அடுத்து தலைநகர் குறொஸ்னியின் பெரும்பகுதியை பிரிவினைவாதிகளிடம் பறிகொடுத்த ரஷ்யப் படைகள் மீண்டும் அதனைக் கைப்பற்றுவதற்காக கிளர்ச்சியாளர்களுடன் மூர்க்கத்தனமாக மோதுவதாகவும்—

அங்கு 24 மணி நேரமும் துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்பதாகவும்—

கிளர்ச்சிவாதிகளின் நிலைகள் மீது ரஷ்யப் படை விமானங்கள் அகோர குண்டு வீச்சு நடத்துவதாகவும்— பி.பி ஸி. குறிப்பிட்டது.

அங்கு சிக்கியுள்ள ஆயிரக்கணக்கான மக்களுக்கு உணவு, குடி தண்ணீர் கிடைக்கவில்லை என்றும்—

அங்குள்ள ஆஸ்பத்திரியில் மருந்து வகைகள் தீர்ந்து விட்டன என்றும்— மேலும் தெரிவிக்கப்பட்டது.

பொது மக்கள் உயிரிழப்பு பெரிய அளவில் இருக்கும் என்றும்—

சிக்கியுள்ள மக்களை வெளியேற்றுவதற்கு வசதியாக தற்காலிக போர் நிறுத்தம் ஒன்று ஏற்படக்கூடிய வாய்ப்புகள் உள்ளன என்றும்—

போர் நிறுத்தம் ஏற்பட்டதும் மக்களை வெளியேற்றுவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் யாவும் செய்யப்பட்டுள்ளன என்றும்—

செஞ்சிலுவை சர்வதேசக் குழு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

குறொஸ்னியின் தலை நகரில் உள்ள நாடாளுமன்றக் கட்டடம் இடிந்து வீழ்ந்து எரிவதாகவும்—

ஏராளமான வீடுகள் தரை மட்டமாகியுள்ளதாகவும் — பி. பி. ஸி. குறிப்பிட்டது.

இதற்கிடையில்—

தலைநகர் குறொஸ்னியை ரஷ்யப் படைகள் மீண்டும் கைப்பற்றிவிட்டதாக பிந்திக் கிடைத்த— ஊர்ஜிதம் செய்யப்படாத— தகவல்கள் தெரிவித்தன.

(உ-3)

# வெட்டிய இரு தலைகளுடன் வலம் வந்த கொலைகாரன்

இருவரை வெட்டிக் கொலை செய்த நபர் ஒருவர் அவர்களின் தலைகளை கையில் ஏந்தியவாறு வீதியில் வலம் வந்து பின்னர் பொலீஸில் சரணடைந்தார்.

இப்படியான சம்பவம் ஒன்று தமிழகம் செங்கை எம். ஜி.ஆர். மாவட்டத்தில் திருத்தணிகை அருகேயுள்ள ஸ்ரீநிவாசபுரம் கிராமத்தில் நடந்துள்ளது.

கோவிந்தசாமி முருகன் என்பவர் தமது மைத்துனர் சுப்பிரமணியம் என்பவருடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டதாகவும் —

வாய்த்தர்க்கம் முற்றிக் கைகலப்பான போது முருகன் கத்தியால் அவரை வெட்டியதாகவும்—

இதை தடுக்கச் சென்ற அவரின் தாயாரான பாப்பம்மாளையும் வெட்டியதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

இருவரின் தலைகளையும் கையில் ஏந்தியவாறு கிராமம் முழுவதும் வலம் வந்த முருகன் தலைகளுடன் பொலீஸ் நிலையத்தில் சரணடைந்ததாகவும் — தெரிவிக்கப்பட்டது.

# ஆறு கொள்ளையர்களின் கை விரல்கள் துண்டிப்பு!

### ஈரானில் இப்படித் தண்டனை

ஈரான் நாட்டில் கொள்ளைகளில் ஈடுபட்ட அறுவருக்கு அண்மையில் அவர்களது இரு கைகளிலும் உள்ள விரல்கள் வெட்டித் துண்டிக்கப்பட்டன.

விரல்கள் வெட்டப்பட்டு தண்டனை நிறைவேற்றப்பட்ட சமயம் சிறையிலிருந்த ஏனைய கைதிகள் அழைத்து வரப்பட்டு அவர்களுக்குக் காண்பிக்கப்பட்டது. அவர்களுக்கு இது ஒரு பாடமாக அமைய வேண்டும் என்பதற்காகவே

## உலக அரங்கில்

இந்நிகழ்ச்சி அவர்களுக்குக் காட்டப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஈரானில் இவ்வாறான தண்டனை நிறைவேறியது இதுவே முதல் முறையாகும்.

ஈரான் நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டு கடந்த மாதம் 9 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வந்துள்ள புதிய குற்றவியல் தண்டனைச் சட்டத்தின்படி குற்றத்தின் தன்மைக்கேற்ப கைவிரல்களை வெட்டுதல், கால்விரல்களை வெட்டுதல் ஆகிய தண்டனைகளுடன் மரண தண்டனையும் விதிக்கப்படலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-10)

# கிழக்குசீனாவில் வெள்ளம்; 233 பேர் உயிரிழந்தனர்

கிழக்கு சீனாவில் பியூவான் மாநிலத்தில் கடந்த இருநாள்களாக ஏற்பட்ட வெள்ளத்தில் 233 பேர் இறந்துள்ளனர்; 284 பேரைக் காணவில்லை.

இடைவிடாது பெய்த மழையின் காரணமாக ஏற்பட்ட இந்த வெள்ளத்தினால் சுமார் 70 ஆயிரம் வீடுகள் அடித்துச் செல்லப்பட்டன. ஒரு லட்சம் பேர் வீடுகளை இழந்தனர்.

இராணுவமும், பொலீஸாரும் உதவிப்பணிகளில் பங்கேற்க அழைக்கப்பட்டுள்ளனர். [உ-3]

# ஈழத்தமிழ் அகதிகளுக்கான உதவிநிதியை அதிகரிக்குக!

### தமிழக முதல்வரிடம் கோரிக்கை

மணிலா, ஒக. 12

யாழ். குடாநாட்டில் இருந்து வந்து தமிழகத்தில் தஞ்சம் புகுந்துள்ள அகதி மக்களுக்கான உதவித் தொகையை உயர்த்தித் தர வேண்டும் என்று அரசுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அகதி முகாம்களில் குடியமர்த்தப்பட்டுள்ள குடும்பங்களுக்கு—

குடும்பத்தலைவருக்கு 15 நாள்களுக்கு ஒரு தடவை 75 ரூபாவும், பிறருக்கு வயதுக் கேற்ப 60 முதல் 35 ரூபாவும் உதவித் தொகையாக வழங்கப்படுகின்றது.

ஆறு ஆண்டுகளாக இந்த உதவித் தொகை உயர்த்தப் படவில்லை.

இத் தொகையை உயர்த்தித் தர வேண்டும் என்று முதல்வர் கருணாநிதிக்கு அகதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (உ-3)

### நிவாரணப் பணி விவகாரம்

# இலங்கைக்கு அழுத்தம்: பாட்டாளி கட்சி வற்புறுத்தல்

சென்னை, ஒக. 12

இலங்கையில் இன்னல் படும் தமிழர்களுக்கு சர்வதேச அமைப்புக்கள் நிவாரணப் பணிகளை மேற்கொள்ள இலங்கை அரசுக்கு இந்தியா அழுத்தம் கொடுக்கவேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சி இந்திய அரசைக் கேட்டுள்ளது.

பிரதமர் தேவகௌடா, வெளிவிவகார அமைச்சர் இந்திரகுமார் குஜரால் ஆகியோரிடம் பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ் மேற்கண்டவாறு கோரியுள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் தமது கோரிக்கை பற்றிய தகவலை வெளியிட்டார்

(உ-3)

## தபால்களை சேர்க்குக

வெளியூர்களுக்கான தபால்கள் கப்பல் மூலம் அனுப்ப ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதால் வெளியூர்களுக்கான தபால்களை இன்று காலை 10 மணிக்கு முன்பாக யாழ். பிரதம தபாலகத்தில் சேர்க்குமாறு பிரதம தபாலதிபர் திரு. சு. கோடீஸ்வரன் கேட்டுள்ளார். (உ-3)

# புலிகளுக்கு எதிரான தடைக்கு தமிழகக் கட்சிகள் பல ஆட்சேபம்

மணிலா, ஒக. 12

விடுதலைப் புலிகள் மீது இந்திய அரசு விதித்துள்ள தடையை பல தமிழகக் கட்சிகள் ஆட்சேபித்துள்ளன.

பாட்டாளி மக்கள் கட்சி, தனித் தமிழர் இயக்கம், தமிழ் தேச பொதுவுடைமைக் கட்சி, தமிழர் தேசிய இயக்கம், திராவிடர் கழகம், தமிழ்நாடு மார்க்ஸிஸ லெனின் கட்சி உள்ளிட்ட பல தமிழ்த் தேசிய அமைப்புகளும் மற்றும் ஜனநாயக இயக்கங்களும் இந்தத் தடைக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

தடையை எதிர்த்து கடந்த மாதம் தமிழக தொலைக்காட்சி நிலையத்துக்கு முன்பாக தமிழ்த் தமிழர் இயக்கம் நடத்திய எழுச்சிமிக்க ஆர்ப்பாட்டமும், மறுநாள் மதுரை மேலப் பொன்னகரத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டமும் தடை நீடிக்கப்பட்ட பின் அதை எதிர்த்து தமிழகத் தெருவில் ஒலித்த முதல் குரல் என பத்திரிகை விமர்சகர் ஒருவர் குறிப்பிட்டார்.

(உ-3)

## அம்புலன்ஸ் இல்லை

அச்சுவேலி, ஒக. 12

அச்சுவேலி அரசினர் வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் வாகன வசதி இல்லை.

இதனால் அவசர நோயாளர்களை யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

(இ-11)

## விளான் சந்தி ஊடாக செல்ல அனுமதி

வடமராட்சி, ஒக. 12

பண்டத்தரிப்பு, சில்லாலை, சித்தன்கேணி, மானிப்பாய் பகுதிகளிலிருந்து இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரிக்குச் செல்லும் மாணவர்கள் விளான் சந்தியூடாக இப்போது பாடசாலைக்கு செல்ல வசதி ஏற்பட்டுள்ளது.

இம்மாணவர்களின் நலன் கருதி விளான் புனித யுவானியார் ஆலயத்துக்கு அருகில் சிறியகடை ஒன்றும் திறக்கப்பட்டுள்ளது; (இ-173)

# சமாதானத்தை எதிர்ப்போர் ஒழித்துக் கட்டப்படுவராம்

### அமைச்சர் பீரிஸ் கூறுகிறார்

''இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியில் தீர்வு காணப்படும். அதே சமயம் சமாதானத்தை எதிர்ப்போர்கள் இராணுவ ரீதியில் ஒழித்துக் கட்டப்படுவர்.''

இப்படி நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் கூறியுள்ளார்.

அதிகாரப்பரவலாக்கல் யோசனைகள் பற்றி அரசாங்க அதிகாரிகள் மத்தியில் பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

''அதிகாரப் பரவலாக்கல் யோசனைகளால் கிடைக்கக் கூடிய நன்மைகளை அரச ஊழியர்கள் புரிந்து கொள்ள வேண்டும், அதனை அமுல்படுத்துவதற்கு ஆதரவு அளிக்க வேண்டும்.'' — என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

## திருப்பலி

கரவெட்டி பரலோக அன்னை திருநாள் திருப்பலி எதிர்வரும் வியாழக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறும்.

பருத்தித்துறை மறைக் கோட்ட முதல்வர் அருட்திரு பி. எம். இம்மானுவேல் அடிகளார் தலைமையில் திருப்பலி நடைபெறும். தொடர்ந்து பரலோக அன்னையின் திருச்சொரூப பவனியும், ஆசீரும் இடம்பெறும். (உ-3)

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தேவை

கிணறு வெட்டுவதில் அனுபவமுள்ள தொழிலாளர் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும். வே. வேதநாயகம் (C,T.B), இல. 70/7, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம். (42194)

### ஒலிப் பதிவாளர்

5 வருட முன் அனுபவமுள்ள ஒலிப்பதிவாளர்கள் தேவை. கவர்ச்சிகரமான வேதனம் வழங்கப்படும். சிபார் சுகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா. விண்ணப்பங்களை: மே/பா, இல:- 512, உதயன் பணிமனை, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பவும் [சி-2742]

### இடமாற்றம்

மானிப்பாயில் இயங்கிய Dr. பாலபாஸ்கரனின் வைத்தியசாலையும், எனது வைத்தியசாலையும் மாலையில் மட்டும் ஆனைக்கோட்டைச் சந்திக்கு அருகாமையில், இயங்குகின்றது. Dr. K. சிவனடியான். (42158)

### விற்பனைக்கு

வீட்டுடன் கூடிய 1½ பரப்பு காணி நல்ல தண்ணீர் வசதியுடன் உடன் விற்பனைக்குண்டு. வீட்டுத் தளபாடங்களும், பாவனைப் பொருள்களும் விற்பனைக்குண்டு. தொடர்பு: க. நரேந்திரன், இல 383/1 நாவலர் ஒழுங்கை, ஆனைப்பந்தியடி, யாழ்ப்பாணம். (42192)

### இலவச திருமண சேவை

ஆண் உத்தியோகத்தர்களுக்கும், பெண் டாக்டருக்கும், ஆண் அப்போதிக்கரிக்கும், ஆசிரியருக்கும் துணை தேவை. தொடர்பு நேரில் மட்டும். க. நடராஜா மே/பா முத்துக்குமாரு செல்லப்பா, புன்னாலைக் கட்டுவன், தெற்கு. (42176)

### முதியோர் பராமரிப்பு

ஆர்வம் உடையோர் இரு நற்சாட்சிப் பத்திரங்களுடன், எழுத்து மூலம் தொடர்பு கொள்க. யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவை. இல. 135, பழைய பருத்தித்துறை வீதி, நல்லூர். (42211)

### அக்கரைச் சீமையில்

250 நாடகங்கள் எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் நாவல். இங்கிலாந்து சென்ற ஓர் அழகிய இளம் தமிழ்ப் பெண்ணின் சுவையான கதை மலிவு விலை ரூபா 25. (42209)

### கண்டெடுப்பு

கொட்டொலை துர்க்காபுரம், தெல்லிப்பளையைச் சேர்ந்த கணேசானந்தன் கஜேந்திரன் என்பவரின் தேசிய அடையாள அட்டை இல. 771971970V கண்டெடுக்கப்பட்டு எமது நிறுவனத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் நேரில் சமுகம் தந்துபெற்றுக் கொள்ளவும். தகவல்: உரிமையாளர், போட்டோசெலக்ட், காங்கேசன்சாலை, இணுவில். (42212)

### வீடு விற்பனைக்கு

நுணாவில் கிழக்கு சாவகச்சேரியில் கண்டி வீதிக்கு அருகாமையில் வீடுடன் கூடிய 5 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: J.S.T. 15, கண்டி வீதி(கோட்டடி) சாவகச்சேரி. (42214)

### சோதிடம்

வெளியூர் ஜெனன சாதகக் குறிப்புகள் எழுத உங்கள் எதிர்கால பலாபலன்கள் திருமணப் பொருத்தங்கள் பார்க்க, ஸ்ரீ மாவை விநாயகர் சோதிட நிலையம், இல. 158, கோவில் வீதி, முடமாவடி, நல்லூர், யாழ்ப்பாணம். (42205)

### கணிதம், ஆங்கிலம்

O / L Distinction, Credit பெறுபேறடைய, தவணைப் பரீட்சைகளில் ஆண்டு 6, 7, 8 9, 10 மாணவர்கள் உயர்ந்த பெறுபேறடையக் கற்பிக்கப் படும். ஆசிரியர் 85, சிவன் கோவிலடி, திருநெல்வேலி. [42207]

### மீண்டும் ஆரம்பம்

வாலையம்மன் வீதியில் உள்ள அம்பாள் வெதுப்பகம் சாந்தி செய்யப்பட்டு 12-8-96 திங்கள் முதல் ஆரம்பிக்கப் பட்டுள்ளது என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்குப் பணிவன்புடன் அறியத் தருகிறேன். (42216)

### வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர், ஆஸ்மா, வாதநோய்கள், மாதவிடாய்குத்து, வலிப்பு, சரும நோய்கள், மூல மூத்திர ரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வைத்திய கலாநிதி சி. இராசரத்தினம் 121, 2 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். [42111]

## சைவ சமய விளக்கப் பயிற்சி வகுப்பு

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் எதிர் வரும் **1996 - 09 - 03** செவ்வாய்க்கிழமை தொடக்கம் மேற்படி வகுப்புகள் காலை **9-00** மணி முதல் **10** தினங்கள் நடைபெறவுள்ளன. **40** வயதுக்குட்பட்டோர் விண்ணப்பித்துக் கலந்து கொள்ளலாம். விண்ணப்பங்கள் **96 - 08 - 20** ஆம் திகதிக்கு முன்பதாக ஆதீனத்தில் எழுத்து மூலம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

ஆதீன முதல்வரின் அருளாணையின் வண்ணம்
ஆதீன மேலாளர்.

(C/2747)

## கண்ணீர் அஞ்சலி

எமது அணியைச்சேர்ந்த
யோ. தர்மேந்திராவின் தந்தையார்

**செல்வரெத்தினம் யோகேந்திரன்**
அவர்கள்
(ஓய்வுபெற்ற சுகாதார உத்தியோகத்தர்)

10 - 08 - 96 இல் கொழும்பில் காலமாகிவிட்டார்.
அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள்.

— 16 ஆம் அணி —
யாழ். மருத்துவபீடம்.

(42217)

## குமுதினியை திருத்தக் கோரிக்கை

கடந்த ஐந்து வருடங்களுக்கு மேலாக ஸ்தம்பிதமடைந்திருக்கும் நெடுந்தீவுக்கான அரச படகுச் சேவையை மீண்டும் விரைவில் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்குமாறும்—

தற்சமயம் நெடுந்தீவு துறைமுகத்தில் பழுதடைந்து கிடக்கும் ''குமுதினி'' படகை துரிதமாகப் புனரமைத்து உதவுமாறும்—

யாழ். அரசாங்க அதிபர் மற்றும் சம்பந்தப்பட்ட திணைக்களப் பொறியியலாளர் ஆகியோரிடம் நெடுந்தீவு முன்னேற்றக் கழகம் கோரிக்கை விடுத்துள்ளது. (உ-111)

சுன்னாகம்
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
(வ — து) சுன்னாகம்

## பொதுமுகாமையாளர் பதவி

கு. இல. **101 : 06**

மேற்படி பதவிக்கு யாழ். மாவட்டத்தில் வசிக்கும் தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

சம்பளத் திட்டம்: ரூ. **1305/- — 2370/-**
**60 x 4: 75x11**

இத்துடன் சங்கத்தால் வழங்கப்படும் சகல அலவன்சுகளும் வழங்கப்படும்.

தகைமை:

அ) கூட்டுறவுப் பணியாளரின் 7ஆவது சம்பளத் திட்டத்தில் முகாமை / மேற்பார்வை மட்டப் பதவியில் மூன்று வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 6ஆவது சம்பளத் திட்டத்தில் முகாமை / மேற்பார்வை மட்டப் பதவியில் ஆறு வருடங்களுக்குக் குறையாத அனுபவம்,

அல்லது,

ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டம் அல்லது அதற்கு இணையான பட்டத்துடன், அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் ஸ்தாபனமொன்றில் முகாமை மட்டப் பதவியில் 04 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்,

அல்லது,

இ) கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரம் (உயர்தரம்) / க. பொ. த. (உயர்தரம்) ல் மூன்று பாடங்களிலான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் ஸ்தாபனமொன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் ஆறு வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

வயது:

விண்ணப்ப முடிவு திகதியன்று **23** வயதுக்குக் குறையாமலும், **40** வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பப் படிவத்தையும், மேலதிக விபரங்களையும் சங்கத் தலைமை அலுவலகத்தில் வேலை நாட்களில் ரூ. 10/- செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

**விண்ணப்ப முடிவு திகதி: 14 - 09 - 1996**

தலைவர்

06-08-96. (சி-2676)

# மங்கைப் பருவ மங்கள நன் நீராட்டு விழா அழைப்பு



அன்புடையீர்;

நிகழும் தாது வருடம் ஆடி மாதம் 31 ஆம் நாள் [15-8-1996]
வியாழக்கிழமை மு. ப. 7 மணி 34 நிமிடம் முதல் 9—4 மணி
வரையுள்ள சிங்கலக்கின் சுபமுகூர்த்த வேளையில்

எமது ஏக புத்திரி திருநிறை செல்வி
★ **பிரிந்தினி** ★

அவர்களுக்கு மங்கைப் பருவ மங்கள நன் நீராட்டு விழா நடாத்த திருவருள் துணை கொண்டு பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், தாங்கள் தங்களது குடும்ப சமேதராய் குறிப்பிட்ட நேரத்திற்கு வருகை தந்து செல்வியை ஆசீர்வதித்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கிறோம்.



முக்கிய குறிப்பு:

சூழ்நிலை காரணமாக தனிப்பட்ட அழைப்பு அனுப்ப முடியாமைக்கு வருந்துகின்றோம். எனவே இதனை அழைப்பாக ஏற்று, மானிப்பாய், சங்குவேலி, காரைநகர், நாச்சிமார் கோவிலடி, உடுப்பிட்டி, பருத்தித்துறை, சாவகச்சேரி சாரியடி பகுதிகளில் உள்ள உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இவ்வைபவத்தில் கலந்து சிறப்பிக்குமாறு வேண்டுகின்றோம்.

★ இங்ஙனம் தங்கள் நல்வரவை விரும்பும் ★
க. முருகையா (பத்தர்),
அழகாபுரி,
ஆஸ்பத்திரி ஒழுங்கை,
மானிப்பாய்.

தங்கள் நல்வரவை நாடும்:
க. முருகையா இராசேஸ்வரி,
ஜெயகிரி பவனம்,
குருக்கள் குடியிருப்பு, கரம்பக்குறிச்சி,
ஆஸ்பத்திரி வீதி, வரணி.

[42215]

## உதயன்

### சம்பள உயர்வு

அனைத்து அரசாங்க ஊழியர்களுக்கும் முப்படையினருக்கும் பொலீஸாருக்கும் அடுத்த வருடம் ஜனவரி மாதத்திலிருந்து சம்பள உயர்வு வழங்கப்படும் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அறிவித்திருக்கிறார்.

அவரின் வாய்ச் சொல் நிறைவேறிவிட வேண்டும்; செயல்வடிவம் பெறவேண்டும்; அதிகரித்த சம்பளம் கைக்கு எட்டிவிடவேண்டும் என்பதே சகல அரச சேவையாளர்களினதும் விருப்பமாக இருக்கும்; வேண்டுதலாகவும் இருக்கும்.

இப்போது வான் முகட்டை முட்டி நிற்கும் வாழ்க்கைச் செலவை மிகச் சிறிதளவேனும் ஈடுசெய்வதற்கு, சம்பள உயர்வு — அதிகரிக்கும் வருமானம் — உதவிடும் என்ற நப்பாசையே மேற்சொன்ன வேண்டுதலுக்குக் காரணமாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. சும்மா இருந்த அம்மையாருக்கு அரைப்பணத்துத் தாலி பெரும் வரப்பிரசாதம் என்ற நிலை இது.

அதனால்தான் தொழிற்சங்கங்கள் ஜனாதிபதியின் அறிவிப்பை வரவேற்றுள்ளன. நன்றி தெரிவித்துள்ளன. இது கூட, கைக்கு வரு முன் நெய்க்கு விலைபேசும் அரசியற்சார்புடைச் செயலே.

இப்போதுள்ள மானியங்கள் பலவற்றை நீக்கப் போவதாக கடந்த மாதம் 25 ஆம் திகதி ஜனாதிபதி அறிவித்திருந்தார். போருக்கு மிகக் கூடுதல் நிதி செலவாகுவதால், அது தொடரும் என்பதால் மேன்மேலும் பணம் கரைந்து போகும் என்பதால்தான் மானிய நீக்கம் அவசியமாகிறது என்ற அர்த்தம் அவரது பேச்சில் தொனித்தது.

அதனை அறிவித்த பதினைந்து நாள்களில் — இம்மாதம் ஒன்பதாம் திகதி — இரத்தினபுரியில் நடந்த பொதுக்கூட்டத்தில் அரச ஊழியருக்கான சம்பள உயர்வு குறித்து அறிவித்திருக்கின்றார் ஜனாதிபதி.

கோதுமை மா, உரவகைகள், சமுர்த்தி, நெல் ஆகியவற்றுக்கு இப்போது வழங்கப்படும் மானியங்களையே அரசு நீக்கப்போவதாக பொருளியல் வட்டாரங்களில் பேச்சடிபடுகிறது.

அந்த மானியங்களை நீக்குவதனால் கிடைக்கும் பணத்தைக் கொண்டுதான் அரச ஊழியருக்குச் சம்பள உயர்வு வழங்கப்படுமா? இது இரண்டு பூனைகளுக்கு அப்பம் பங்கிட்ட குரங்கின் கதையைத்தான் நினைவூட்டுகிறது. ஒரு பூனை அரச ஊழியர்; இரண்டாவது பூனை விவசாயிகள் உட்பட்ட சாதாரண மக்கள்.

முல்லைத்தீவில் இழந்த ஆயுதங்களின் நஷ்டத்தை ஈடு செய்வதற்காகவே மானிய வெட்டு என்று கொழும்பில் சிலர் கிண்டலாகப் பேசிய போதிலும்—

மானிய வெட்டு அவசியம் என்று உலக வங்கியும் சர்வதேச நாணய நிதியமும் கட்டாயப் படுத்தியதாலேயே அது பற்றிய அறிவிப்பு வந்திருக்கிறது என்பது தான் உண்மை.

அடுத்த பக்கத்தில் மானிய வெட்டின் நடைமுறை — நேரடி—விளைவு வாழ்க்கைச் செலவை அந்தமில்லாமல் உயர்த்தப் போவது நிச்சயம். அப்போது மக்கள் கொந்தளிப்பு ஒன்று உருவாகாமல் தடுப்பதற்காகவே அரச ஊழியர்களுக்குச் சம்பள உயர்வு அறிவிப்பு.

போரினால் பொருளாதாரம் அதள பாதாளத்துக்குச் செல்கிறது என்பதனை வெளிப்படையாகக் கூறும் அரசாங்கம் அதனை நிறுத்துவதில் உடனடி அக்கறை காட்டினால் பல பிரச்சினைகளைத் தீர்க்க உதவும்.

வகுப்பறைக்கு செல்லாது

# அரட்டையடிக்கும் ஆசிரியர்கள் கடும் தண்டனைக்குள்ளாவார்கள்!

## பிரதிக் கல்விப் பணிப்பாளர் எச்சரிக்கை!!

வலிகாமம் தெற்கு, ஒக 12

''பாடசாலைக்கு வருகை தந்து வகுப்பறைகளுக்கு செல்லாது அரட்டை அடிக்கும் ஆசிரியர்கள் மீது கடுமையான தண்டனைகள் மேற்கொள்ளப்படும்''

உடுவில் கல்விக்கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சு. இரத்தினராசா இவ்வாறு எச்சரித்துள்ளார்.

ஆசிரியர்களின் வகுப்பறை கற்பித்தலில் பாடசாலை அதிபர்கள் போதிய மேற்பார்வை செய்ய வேண்டும்.

இன்றைய காலகட்டத்தில் ஆசிரியர்கள் கற்பித்தலில் அதிக ஆர்வம் காட்டவேண்டும். பூர்த்தி செய்யப்படாத பாடஅலகுகளை விசேட வகுப்புகள் நடத்தி பூர்த்தி செய்ய வேண்டும்.

இடம் பெயர்ந்த மாணவர்கள் விடயத்தில் பல பாடசாலை அதிபர்கள் விடுகைப் பத்திரம் வழங்குவதை தட்டிக் கழித்து வருவதாகத் தெரிய வருகின்றது.

விடுகைப் பத்திரம் இன்றி மாணவர்கள் பாடசாலையில் சேர்க்கப்படுவது ஒழுக்க விதிகளுக்கு மாறானது — என்று அவர் மேலும் சொன்னார்.

எனவே பாடசாலைகளில் சேரும் மாணவர் விடயத்தில் விடுகைப் பத்திரம் வழங்க மறுக்கும் பாடசாலை அதிபர் பெயர் விவரங்களைத் தமக்கு அறிவிக்குமாறும் அவர் அதிபர்களைக் கேட்டுள்ளார்.

(உ-152)

ஆளில்லாத வீட்டிலிருந்த

## சீற்றுகளைக் கழற்றியவர் வகையாகச் சிக்கினார்

நவாலி, ஒக. 12

ஆட்கள் இல்லாத வீட்டில் இருந்த சீற்றுகளை (கூரைத் தகடுகளை) கழற்றி எடுத்து டிராக்டரில் ஏற்றிக் கொண்டு செல்ல முற்பட்ட ஒருவர் கிராம சேவையாளரிடம் வகையாக மாட்டிக் கொண்டார்.

யாழ்ப்பாணம் பொம்மைவெளிப் பகுதியில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

வன்னிக்கு இடம் பெயர்ந்து சென்றவர்களின் வீடு ஆளில்லாமல் இருந்ததாகவும்—

அங்கு சென்ற ஒருவர் வீட்டிலிருந்த சீற்றுகளைக் கழற்றி டிராக்டரில் ஏற்றிய சமயம் தகவல் கிடைத்து அங்கு சென்ற பெண் கிராம சேவையாளரிடம் அவர் வகையாக மாட்டிக் கொண்டாதாகவும் கூறப்படுகின்றது.

சீற்றுகளைப் பறிமுதல் செய்த கிராமசேவையாளர் சம்பந்தப்பட்ட நபரை எச்சரித்து அனுப்பிவைத்தார்.

(உ-100)

# இலங்கை அரசின் பக்கம் அமெரிக்கா சாய்கிறதா?

## தூதரக அதிகாரி மறுப்பு

இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் இலங்கை அரசின் பக்கம் அமெரிக்கா சாய்கின்றது என்ற குற்றச்சாட்டை அமெரிக்கா மறுத்திருக்கின்றது.

கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரக அதிகாரி ஒருவர் புலிகளின் குற்றச்சாட்டை மறுத்திருப்பதாக நேற்றைய தினசரிகள் செய்தி வெளியிட்டிருக்கின்றன.

இலங்கையில் இப்போது நடக்கும் யுத்தம் தொடர்பாக பாரபட்சமான நிலையை எடுக்க வேண்டாம் என்று விடுதலைப் புலிகள் தமது அதிகார பூர்வ பத்திரிகை மூலம் அமெரிக்காவைக் கேட்டிருந்ததாகவும் கூறப்பட்டது.

அதற்குப் பதிலளிக்கும் விதத்திலேயே தூதரக அதிகாரி மேற்படி கருத்தை வெளியிட்டார்.

இலங்கை அரசும், விடுதலைப்புலிகளும் மீண்டும் பேச்சைத் தொடங்கினால் வாஷிங்டனுக்கு அதில் எந்த வித பங்கு பணியும் இருக்காது என்றும் அந்த அதிகாரி மேலும் சொன்னார்.

(உ-3)

## ஒய்வூதியப் பணிகள் பிரதேச செயலகங்களிடம்

### யாழ்., நல்லூரில் இவ்வசதி

கொழும்புத்துறை, ஒக. 12

யாழ்ப்பாணம், நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் பிரதேச செயலர் பிரிவுகளாக கடந்த முதலாம் திகதி முதல் தரம் உயர்த்தப்பட்டுள்ளதை அடுத்து —

இந்தப்பிரதேச எல்லைக்குட்பட்ட ஒய்வூதியர்களுக்குரிய பணிகளை இந்த அலுவலகங்களுக்கு மாற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதுவரை காலமும் யாழ். செயலக ஒய்வூதியக் கிளையால் மேற்கொள்ளப்பட்ட பணிகளை பிரதேச செயலகங்கள் ஊடாகமேற்கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது.

அதனையடுத்தே யாழ்ப்பாணம், நல்லூர்ப் பகுதிகளில் உள்ள ஒய்வூதியர்களுக்கு யாழ். அரச அதிபர் இது தொடர்பாக கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

யாழ்ப்பாணம், நல்லூர்ப் பிரதேச செயலகங்களில் ஓய்வூதியம் பெறுவது தொடர்பாக அவர்களின் விருப்பத்தை அரச அதிபர் அக்கடிதத்தில் கோரியுள்ளார்.

(அ-30-3)

# யுத்தம் நீடித்தால் பேரழிவு ஏற்படும்

## அமைச்சர் தொடங்கொட கூறுகிறார்

''யுத்த நிலை நீடித்தால் நாடு பேரழிவைச் சந்திக்கும்''

இப்படி சுதேச வைத்திய மாகாண சபைகள் அமைச்சர் அமர சிறி தொடங்கொட தெரிவித்தார்.

நாட்டில் எழுந்துள்ள இனப்பிரச்சினைக்கு ஒரே மார்க்கம் அரசியல் தீர்வே ஆகும். சகல இன மக்களும் எதிர்காலத்தை திட்டமிட்டு செயற்படுத்த வேண்டிய ஒரு கால கட்டத்திலேயே வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

தற்போதைய யுத்த நிலை நீடிக்குமானால் நாடு பேரழிவை எதிர்நோக்கும். எனவே தான் அரசியல் தீர்வைக்காண நாம் விரும்புகிறோம். — இப்படி அவர் மேலும் கூறினார்.

குளியாப்பிட்டியில் நடந்த கருத்தரங்கு ஒன்றில் பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

(இ-3)

### காயமுற்றவர் மரணம்

யாழ்ப்பாணம், ஒக. 12

திருநெல்வேலி பிரதான வீதியில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தவர் நேற்று அங்கு மரணமானார்.

மீசாலையைச் சேர்ந்த இராசா குலசிங்கம் (வயது 53) என்பவரே உயிரிழந்தவராவர். மரணவிசாரணையின் பின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

(உ-15)

### ஒரு மாத லீவு

கொழும்பு, ஒக. 12

'சூரியப் பிரகாசம் - 2' இராணுவ நடவடிக்கையின் பின் தாம் வேலை செய்த இடங்களிலிருந்து யாழ்ப்பாணம் சென்று மீண்டும் தமது அலுவலகங்களுக்குத் திரும்ப முடியாதிருக்கும் அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கு ஒரு மாத காலத்துக்கு விசேட லீவு வழங்கப்படும் என்று பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது.

போக்குவரத்து வசதிகள் இன்றி ஐம்பதுக்கும் மேற்பட்ட அரச ஊழியர்கள் யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

(உ-3)

## மிதிவெடியில் சிக்கியவர் ஆஸ்பத்திரியில் மரணம்

யாழ்ப்பாணம் ஒக. 12

மிதிவெடியில் சிக்குண்டு படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட ஒருவர் நேற்று அங்கு மரணமானார்.

கடந்த சனிக்கிழமை நீர்வேலியில் தோட்டத்தில் புல் கொத்தித் துப்புரவு செய்து கொண்டிருந்த வேளை மிதிவெடி வெடித்துத் தலையில் படுகயமடைந்த நிலையில் ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரப்பட்ட கணபதிப்பிள்ளை சந்திரசேகரம் (வயது 53) என்பவரே உயிரிழந்தவராவார்.

(உ-15)

## அளவையியல் வேண்டும்

''அளவையியலும் விஞ்ஞான முறையும்'' என்னும் பாடத்தை மாணவர்கள் அளவையியல் எனச் சுருக்கமாக அழைப்பார்கள். இப்பாடமானது இன்று க. பொ. த. (உ-த) வகுப்பு நடைபெறுகின்ற அனேகமான பாடசாலைகளிலும், தனியார் கல்வி நிறுவனங்களிலும் போதிக்கப்பட்டு வருகின்றது. பல்கலைக் கழகங்களிலும் சட்டத்துறை பயிலுவோர்களும், மெய்யியலை ஒரு பாடமாக படிப்போரும் அளவையியலை ஓர் உப பாடமாகப் படிக்கிறார்கள்.

அவ்வாறிருக்கையில் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் மட்டும் அளவையியல் போதிப்பதற்கு ஆசிரியர் இல்லை. அளவையியலை மிகவிரைவில் க. பொ. த. (உ-த) பாடத்திட்டத்திலிருந்து நீக்கிவிடப் போகிறார்கள் எனக் காரணம் கூறி மாணவர்களை எடுக்க விடாமல் தடுப்பது நியாயமில்லை. மேலும் கடமையில் உள்ள ஆசிரியர்கள் போதிக்கக்கூடிய பாடங்களின் வசதிக்கு மாணவர்களைப் பாடத்தை எடுக்கச் சொல்வதும் நியாயமில்லை. இது ''தலைக்கு ஏற்றால் போல் தொப்பி எடுப்பதற்கு பதிலாக, தொப்பி இதுதான் இருக்கிறது தலையை மாற்றி அமையுங்கள்'' என்பதற்கு சமனாகும். யாழ்ப்பாணத்தில் முதல் தர பெண்கள் பாடசாலையான இந்து மகளிர் கல்லூரியில் இந்நிலை தொடரக் கூடாது.

### வாசகர் திருமுகம்

இத்தகைய ஒரு நிலைமை கடந்த நான்கு வருடங்களுக்கு முன்பு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் ஏற்பட்டபோது அதிபரும், பாடசாலை நலன்விரும்பிகளும், தலையிட்டு வசதிக்கட்டணம் மூலம் ஓர் ஆசிரியரை நியமித்து மாணவியருக்கு அளவையியலை ஒரு பாடமாகப் போதித்தார்கள்.

இப்பாடத்தை மாணவர்கள் ஒரு தெரிவுப் பாடமாக எடுப்பதன் நோக்கங்கள் வருமாறு:-

1) கூடிய புள்ளிகளைப் பெற்று பல்கலைக்கழகம் புகும் வாய்ப்பை அதிகரித்தல்
2) குறுகிய காலத்தில் பாடத்திட்டத்தை முடிக்கலாம்.

ஆகவே யாழ். இந்து மகளிர் கல்லூரி அதிபரும், ஆசிரியர் குழாமும், அபிவிருத்திச் சபையினரும், நலன் விரும்பிகளும் இவ்விடயத்தில் அக்கறை எடுத்து மாணவிகளின் எதிர்கால முன்னேற்றத்துக்கு வழி சமைக்க வேண்டும் என மிகவும் பணிவாக வேண்டுகிறேன்.

ச. உமாசுதன்.

மானிப்பாய்.

வாசகர் கவனத்திற்கு,

வாசகர் திருமுகப் பகுதிக்கு மடல்களை அனுப்புவோர் தமது சொந்தப் பெயர், நிரந்தர விலாசம் என்பனவற்றைத் தவறாது குறிப்பிட வேண்டும்.

புனைபெயர்களில் பிரசுரமாக வேண்டும் என்று விரும்பினும் சொந்தப் பெயர் குறிப்பிட்டால் மட்டுமே பிரசுரத்துக்குப்பரிசீலனை செய்யப்படும். (ஆ-ர்)

# மீண்டும் மூதவை?

# தெரிவுக் குழு ஆய்வு!

கொழும்பு, ஒக. 12

1971 ஆம் ஆண்டு ஐக்கிய முன்னணி அரசால் கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தின் மேல் சபையான செனட் சபை (மூதவை) மீண்டும் உருவாக்கப்படுமா?

மூதவையை மீண்டும் உருவாக்குவதன் மூலம் பெரும்பான்மை, சிறுபான்மை சமூகங்களுக்கிடையே அதிகாரத்தைப் பகிரமுடியுமா என்பது பற்றி கடந்த செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத் தெரிவுக்குழுவால் ஆராயப்பட்டதாகத் தெரியவந்தது.

நாடாளுமன்றத்தால் அவசர கோலத்தில் நிறைவேற்றப்படும் பிரேரணைகள் உடனடியாகச் சட்டமாவதைத் தாமதப்படுத்தும் நோக்கிலும் —

பொதுத் தேர்தல் மூலம் பிரதிநிதித்துவம் கிடைக்காத சமூகத்தினருக்குப் பிரதிநிதித்துவம் கிடைக்க வழி ஏற்படுத்துவதற்காகவும் —

சோல்பரி அரசமைப்பின் கீழ் மூதவை உருவாக்கப்பட்டது.

முப்பது உறுப்பினர்களைக் கொண்ட மூதவைக்கு 15 அங்கத்தவர்கள் கீழ் சபையான நாடாளுமன்றத்தாலும் ஏனைய 15 உறுப்பினர்கள் பிரதம மந்திரியின் ஆலோசனையின் பேரில் மகா தேசாதிபதியாலும் அப்போது நியமிக்கப்பட்டனர்.

கடந்த வாரம் விபத்தில் சிக்கி மரணமான லிபரல் கட்சியின் தலைவர் சானக அமரதுங்கா அதிகாரத்தைப் பரவலாக்கும் நடவடிக்கையின் ஓர் அங்கமாகச் செனட்சபை (மூதவை) மீண்டும் உருவாக்கப்படவேண்டும் என நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் தெரிவித்திருந்தார். [உ-10]

## நுவரேலியா மேயர் கொலை முயற்சி:

# பூநகரி முகாம் சிப்பாய் சந்தேகத்தில் கைது!

கொழும்பு, ஒக 12

நுவரேலியா மேயர் கொலை முயற்சிச் சம்பவம் தொடர்பாக பூநகரி ராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவச் சிப்பாய் ஒருவரை நுவரெலியா பொலீஸார் கைது செய்துள்ளனர்.

கொழும்புப் பத்திரிகை ஒன்று இத்தகவலை வெளியிட்டிருக்கின்றது.

நுவரெலியா மேயர் திருமதி நளின் திலக ஹேரத் மற்றும் சிலருடன் கடந்த 2 ஆம் திகதி வீடு திரும்பிக் கொண்டிருந்த சமயம் அவரின் காரின் மீது துப்பாக்கிப் பிரயோகமும், கிரனேட் வீச்சும் இடம் பெற்றது தெரிந்ததே.

இந்தச் சம்பவம் தொடர்பாகவே மேற்படி சிப்பாய் கைது செய்யப்பட்டிருக்கின்றார்.

மேற்படி கொலை முயற்சிச் சம்பவத்தை அடுத்து விபத்தில் சிக்கியதாகக் கூறப்படும் சந்தேக நபர் நுவரேலியா ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்ததாகவும்—

அப்போது பொலீஸாரின் வலையில் அவர் சிக்கியதாகவும் தெரிவிக்கப்பட்டது. [உ]

# கிருஷ்ணா நதி நீர்ப்பங்கீடு: இணக்கத் தீர்வு இல்லை

கிருஷ்ணா நதி நீர்ப் பங்கீடு தொடர்பாக ஆந்திரப் பிரதேச – கர்நாடக முதலமைச்சர்கள் நடத்திய கூட்டத்தில் இணக்க நிலை ஏதும் ஏற்படவில்லை.

இப்பிரச்சினையில் எந்தவொரு மாநிலத்தையும் தான் கட்டாயப்படுத்தவில்லை என்றும்—

நடுவர் மன்ற தீர்ப்பின்படி செயற்படுமாறு மட்டுமே தான் கேட்டுக்கொண்டதாகவும்—

இரண்டரை மணி நேரம் நடந்த இக் கூட்டத்திற்கு பின்னர் பிரதமர் தேவகௌடா தெரிவித்தார்.

இரு மாநிலங்களிலும் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் பாசனத் திட்டங்கள் பற்றிய தொழில் நுட்ப விவரங்களை திட்டக் கமிஷன் மற்றும் மத்திய நீர்வளக் கமிஷனிடம் சமர்ப்பிக்குமாறு ஆந்திரப் பிரதேச மற்றும் கர்நாடக மாநிலங்களைத் தாம் பணித்திருப்பதாகவும் பிரதமர் தேவகௌடா செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்த ஆவணங்களை அலசி ஆராய்ந்து நடுவர்மன்ற தீர்ப்புக்கு எதிராக ஏதேனும் இருக்கிறதா என்பதை கண்டறிய அதற்கான நிபுணர்களை மாநிலங்கள் நியமிக்கலாம் என்றும் அவர் கூறினார்.

இந்தக் கூட்டத்தில் மகாராஷ்டிர முதலமைச்சர் மனோஹர் ஜோசியும் கலந்து கொண்டார். (உ-3)

## இதய அஞ்சலி

சைவப் பெரியார்

### திருமிகு க. வி. நடராசா J. P.

*(தர்மகர்த்தா - உசன் கந்தசுவாமி கோயில்)*

எமது துர்க்காபுரம் மகளிர் இல்லப் பிள்ளைகள் இடம்பெயர்ந்து சென்றவேளை இன்முகத்தோடு வரவேற்று ஆறுமாதகாலமாக தன் மாளிகையில் தங்க வைத்து நல்லாதரவு காட்டிய நற்பெரியாரின் மறைவுச் செய்தி கேட்டு எம் இதயத்தால் அஞ்சலி செலுத்துகின்றோம்.

அன்னாரது ஆத்மா சாந்தி பெற அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

துர்க்காபுரம் மகளிர் இல்லம்,
துர்க்கை அம்மன் ஆலயம்,
தெல்லிப்பழை.

11-08-96

(42222)

மரண அறிவித்தல் 2ஆம் பக்கத்தில்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அவர்களதுபணிமனையில் 12-08-1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## வடக்கில் கரப்பந்தாட்டம்

கொழும்பு, ஒக. 12

யாழ்ப்பாணத்தில் பாடசாலை மட்டத்தில் கரப்பந்தாட்ட விளையாட்டை ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கல்வி, உயர் கல்வி அமைச்சின் விளையாட்டுப் பிரிவுக்குப் பொறுப்பான பிரதிப் பணிப்பாளர் நாயகம் சுனில் ஜயவீர தெரிவித்தார்.

பாடசாலை மட்டத்தில் சுற்றுப் போட்டி நடத்தவும் ஏற்பாடுகள் செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

### தமிழகம்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தற்போது காவல் துறையினர் அவர்களை விசாரணை செய்து வருவதாகவும் —

இருபத்தி மூன்று பேர் கொண்ட மற்றொரு குழுவினர் தனுஷ்கோடிக்கு வந்திருப்பதாக மற்றொரு செய்தி தெரிவிப்பதாகவும் —

மாநிலச் செய்தியில் மேலும் அறிவிக்கப்பட்டது.

தெற்குக் கடற்கரை நகரமான இராமேஸ்வரத்திற்கு நேற்றுக்காலை மேலும் 52 ஈழத் தமிழ் அகதிகள் வந்து சேர்ந்துள்ளனர் என்றும் —

இவர்கள் மூன்றுபடகுகளில் தனுஷ்கோடியை அடைந்தனர் என்றும் —

பி.பி.ஸி. தகவல் வெளியிட்டது.

இவ்வாறு வந்தவர்களில் 21 பேர் பொலீஸாரால் விசாரிக்கப்பட்டு வருகின்றனர் என்றும் பி.பி.ஸி. குறிப்பிட்டது.

ஏற்கனவே வியாழனன்று வந்த 2! அகதிகள் மண்டபம் முகாமிலும் அதற்கு முன்னர் வந்த 17 பேர் மற்றைய முகாம்களிலும் வைக்கப்பட்டிருப்பதாக மேலும் தெரிவிக்கப்பட்டது.

இத்தகவல்களின்படி கடந்த வாரத்தின் பின் இதுவரை 90 இலங்கைத் தமிழ் அகதிகள் தமிழகம் சென்றிருக்கின்றார்கள்

இராணுவ நடவடிக்கைகளுக்கு அஞ்சியும், பட்டினிச் சாவிலிருந்து தப்புவதற்காகவும் தாங்கள் புகலிடம் தேடி தமிழகத்துக்கு வந்ததாக இவர்களில் பலர் தெரிவித்துள்ளனர்.

ஜூலை மாத இறுதியிலிருந்து நேற்று வரை 70 இலங்கைத் தமிழ் அகதிகள் இந்தியாவுக்குச் சென்றிருப்பதாக ''ரோய்ட்டர்'' செய்தி நிறுவனத்தை மேற்கோள் காட்டி, கொழும்பிலிருந்து இயங்கும் ''யெஸ் எவ். எம்'' வானொலி நேற்றிரவு தெரிவித்தது.

தமிழகத்துக்கு வரும் இலங்கைத் தமிழ் அகதிகளை எதிர்கொள்ள தாங்கள் தயாராகி வருவதாக தமிழக அதிகாரிகள் கூறியுள்ளனர்.

''எத்தகைய சூழலையும் எதிர்கொள்ள நாங்கள் ஆயத்தமாகி வருகிறோம்'' — என தமிழக காவல்துறை இயக்குநர் ராஜசேகரி நாயரும் தெரிவித்தார். (உ-3-5-10)

# விரைவில் புதிய வகை அடையாள அட்டைகள்!

கொழும்பு. ஒக. 12

ஒருவரைப் பற்றிய முழு விவரங்களையும் விரைவாக வெளிப்படுத்தக் கூடிய வகையில்— சர்வதேச தரத்திலான — தேசிய அடையாள அட்டைகளை வழங்க ஆள்பதிவுத் திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருவதாக ஆள்பதிவுத் திணைக்கள ஆணையாளர் கே. கே. விஜயரணசிங்க தெரிவித்தார்.

புதிய அடையாள அட்டையில் மும்மொழியிலும் விவரங்கள் எழுதப்பட்டிருக்கும்.

மேலும் அந்த நபரைப் பற்றிய ஏனைய விவரங்கள் அடங்கிய (மக்னிக்கோட்) கிளைப் பதிவு ஒன்றும் அதில் விசேடமாக அமைந்திருக்கும். கணணிப் பதிவுள்ள இந்த அட்டையைச் சம்பந்தப்பட்ட கணணிக்குள் செலுத்தினால் குறிப்பிட்ட நபர் பற்றிய முழு விவரமும் அதிலிருந்து கண்டறியக்கூடியதாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

# மருந்துத் தட்டுப்பாடு

யாழ். போதனா வைத்திய சாலையில் நோயாளரின் பாவனைக்கான மருந்து வகைகளுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

அதுவும் முக்கியமாக ''அன்ரி பயற்றிக்'' மருந்து வகைகளுக்கே கடும் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

வெளி நோயாளர் பிரிவில் சிகிச்சை பெறும் நோயாளர்களின் தேவைக்கென ''டெற்றா சைக்கிளின்'' என்ற 'அன்ரிபயற்றிக்' மருந்தே வழங்கப்படுகிறது. ஏனைய மருந்து வகை தேவையெனில் வெளிக்கடைகளில் வாங்கும்படி டாக்டர்களினால் சிட்டைகள் எழுதிக் கொடுக்கப்படுகின்றன.

இப் பற்றாக்குறையினால் கிளினிக் நோயாளர்களுக்கும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே இந்த மருந்துகள் வழங்கப்படுகின்றன. மிகுதித் தேவைக்கென இவர்களும் வெளியில் வாங்கும்படியே பணிக்கப்படுகின்றனர்.

இதே வேளை வெளியிலும் இம் மருந்துப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## 15 வயதுக்குட்பட்டோருக்கான

# உலகக் கிண்ணக் கிரிக்கெட் அரையிறுதியில் இலங்கை

லண்டன், ஒக. 12

லண்டனில் நடைபெறும் 15 வயதிற்குட்பட்டோருக்கான உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் ஸ்ரீலங்கா அணி அரையிறுதி ஆட்டத்தில் விளையாடும் வாய்ப்பைப் பெறவுள்ளது.

நேற்று முன்தினம் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டியில் ஸ்ரீலங்கா 2 விக்கட்டுகளால் வெற்றியடைந்தது. கடந்த வாரம் நடைபெற்ற ஒல்லாந்திற்கு எதிரான போட்டியிலும் ஸ்ரீலங்கா அணி வெற்றி பெற்றது. எனினும் தென்னாபிரிக்காவுடனான ஆட்டத்தில் 33 ஓட்டங்களால் ஸ்ரீலங்கா அணி தோல்வியுற்றது.

என்றாலும் ஸ்ரீலங்கா அணிக்கு அரையிறுதி ஆட்டத்தில் விளையாடும் வாய்ப்பு பெரும்பாலும் கிட்டலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஸ்ரீலங்கா அணி இன்று பாகிஸ்தான் அணியுடன் மோதவிருக்கின்றது.(உ-10)

### வன்னிக்கு...

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

வவுனியா அரச அதிபர் நம்பிக்கை வெளியிட்டார்.

உணவு அனுப்பும் வேலை சீரடைவதற்கு சொற்பகாலம் எடுக்கும் எனத் தாம் கருதுவதாகவும் அவர் மேலும் சொன்னார்.

வன்னிப் பிரதேசத்தின் உண்மையான உணவுத் தட்டுப்பாடு நிலை தெரியாத பலர் முரண்பாடான தகவல்களைக் கொடுப்பதாகவும் அவர் கவலை தெரிவித்தார். (அ-3)

### குடாநாட்டில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாதாந்தம் தேவைப்படும் அத்தியாவசிய உணவுப் பொருள்கள் பற்றியும் இந்த மதிப்பீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி —

மாதாந்தம் 3 ஆயிரத்து 250 மெற்றிக் தொன் அரிசி, 2 ஆயிரம் மெற்றிக் தொன் மா, 900 மெற்றிக் தொன் சீனி என்பன தேவைப்படுகின்றன.

இதில் ஆயிரத்து 650 மெற்றிக் தொன் அரிசி, 700 மெற்றிக் தொன் மா, 400 மெற்றிக் தொன் சீனி என்பன இலவச விநியோகத்துக்குரியவையாகும். (உ-3)

### பொலீஸ்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தெரிந்ததே.

தற்போதைய எதிர்க் கட்சித் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில்விக்கிரமசிங்காவின் தொகுதியான பியகமாவில் பட்டலந்தைப் பகுதி உள்ளது.

ஆட்சியில் இருந்தவர்களின் உதவியுடன் — சில பொலீஸ் அதிகாரிகளின் ஏற்பாட்டில்— அங்கு சித்திரவதை முகாம் ஒன்று இயங்கியதாகக் கூறப்படும் தகவல்கள் இது தொடர்பாக விசாரணை நடத்தும் விசேட ஜனாதிபதி ஆணைக்குழு முன் வெளிவந்த வண்ணம் இருப்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-3)

### கிளிநொச்சி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நேரச்சாப்பாடாக கஞ்சியை குடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

குழந்தைகளுக்கு பால் மற்றும் பால் மா வசதியும் இல்லை.

கிணறுகளில் தண்ணீர் இல்லை. தண்ணீர் உள்ள கிணறுகளில் 300 அல்லது 400 குடும்பங்கள்வரிசையில்நின்று தண்ணீர் எடுக்கிறார்கள்.

சர்வதேச நிறுவனங்களான கெயர், செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு, எம். எஸ். எவ். ஆகியன கிளிநொச்சி நகரை விட்டுச் சென்று விட்டன. போரூட்டும் இலங்கை செஞ்சிலுவைச் சங்கமும் தான் அங்கு சிறிய அளவில் இயங்குகின்றன. ஆனால அவையும் நிவாரண உதவிசெய்யக்கூடிய வசதியில்லாத நிலையிலேயே உள்ளன.

கிளிநொச்சி உணவுத் தட்டுப்பாடு குறித்துச் சர்வதேச மட்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற ''சூரியப் பிரகாசம்'' நடவடிக்கையால் இடம் பெயர்ந்து, கிளிநொச்சிக்கு வந்த ஒன்றரை லட்சம் அகதிகள் அங்கு தற்காலிக குடிசைகளில் வாழ்ந்து வந்தனர். அவர்கள் இப்போது மீண்டும் இடம் பெயர்ந்துள்ளனர்.

இவர்களுடன் கிளிநொச்சி நகரில் நிரந்தரமாக வாழ்ந்த 55 ஆயிரம் பேரும் இடம் பெயர்ந்துள்ளனர் என்று தெரிவித்தார். (அ-3)